<u>பத்திரிக்கைச் செய்தி</u>

நேற்று 13.10.2020 இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்கள் உத்தரவின் பேரில், வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பிரிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து மாவட்ட இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், வேலூர் மண்டலம் அவர்கள் தலைமையில் சிவப்பு பட்டியல் இடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட மாவட்ட அளவில் உள்ள சுற்றுச்சூழல் பொறியாளர்கள், வேலூர், வாணியம்பாடி, விழுப்புரம், ஒசூர், தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை ஆகியோர்களுடன் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்திற்கு பிறகு இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் வாகனம் மற்றும் அவருக்கு சொந்தமான அலுவலகங்களில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.33,73,000/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.